## தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**காணொளிகாட்சி விசாரணை (Video Conference)**
**ஆணை நாள்: 04.06.2025**

**முன்னிலை**
**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

……………

**வழக்கு எண். SA17130/F/2024**

திரு மு.நெய்னா முகமது … மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்/ வக்பு ஆய்வாளர்
வக்ஃப் கண்காணிப்பளர் அலுவலகம்,
176/11, முதல் தளம்,
தெர்ப்பசயனம் ரோடு
வெளிப்பட்டிணம்,
இராமநாதபுரம் - 623504. … பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் Thiru. M.Naina Mohamed மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக செல்வி/திருமதி. அ சபின்ரிகா, பொதுத் தகவல் அலுவலர்/ வக்பு ஆய்வாளர், வக்ஃப் கண்காணிப்பளர் அலுவலகம், 176/11, முதல் தளம், தெர்ப்பசயனம் ரோடு வெளிப்பட்டிணம், இராமநாதபுரம் ஆகியோர் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்கள்.

2. மனுதாரர் 10.06.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், தேர்தல் அலுவலர், ராமநாதபுரம் வக்பு கண்காணிப்பாளர் அவர்களின் தேர்தல் அறிவிப்பு எண் 5 நாள் 23.06.2023ன் படி அருப்புக்கோட்டை நல்லூர்

முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல் வக்பின் நிர்வாக சபை தேர்தல் 23.07.2023 அன்று ஏன் நடைபெறவில்லை என்ற காரணம் போன்ற தகவல்களை வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 09.07.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மனுதாரர் 31.08.2024 நாளிட்ட பிரிவு 19(**1**)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் 26.12.2024 நாளிட்ட பிரிவு **19(3)**இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவல்கள் தவறான தகவல்கள் எனவும், முழுமையான தகவல் வழங்காத பொதுத் தகவல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, முழுமையான தகவல்களைப் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரியுள்ள தகவல்களை மனுதாரருக்கு வழங்குவதற்கு கொண்டு வந்துள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அத்தகவலின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரர் கோரியுள்ள தகவல்களை ஒரு வார காலத்திற்குள் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது எனவே, இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் வழங்கி கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA17130/F/2024**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்/ வக்பு ஆய்வாளர்
வக்ஃப் கண்காணிப்பளர் அலுவலகம்,
176/11, முதல் தளம்,
தெர்ப்பசயனம் ரோடு
வெளிப்பட்டிணம்,
இராமநாதபுரம் - 623504.

**மனுதாரர்**

Thiru. M.Naina Mohamed,
No.19, Nallur Muslim East St,
Aruppukottai
Virudhunagar - 626101,

Copy to: Judgement File/ Spare.
JE / PA 05.06.2025.